Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

அரிய பழைய பாடல்கள்..

..புதிய இசையில்




Produced by: ℗&© 2011
Kennedy Ministries
A-4, Deju Plaza, No.2, South Avenue
Srinagar Colony, Saidapet, Chennai - 600 015
T: +91 44 22353500, 9940667881, 9940350460
E: kennedy@kennedyministries.org W: www.kennedyministries.org
facebook.com/kennedyministries

Music On
music mindss
A GOSPEL - MEDIA COMMUNICATIONS
Post Box No. 5312|Chennai - 24|Tel: 044-42 917 917
2472 5031, 2480 0632, Tele - Fax: 2480 3938
E-mail: gospelmedia@musicmindss.com,
Visit us at: www.musicmindss.com
M.R.P. ₹ 75/- in Tamilnadu. ₹ 85/- in Other States in India.
BUY ORIGINAL CD's/MP3/DVD WITH MUSIC MINDSS HOLOGRAM

Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 5 ISSUE . 6

தனிப்பிரதி ரூ 20/= ஜனவரி 2012



# வார்த்தை

நிஷா ஜென்னி



**உ**மது சகல பிரஸ்தாபத்தைப் **பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்** (சங்கீதம் *138:2*). நம் தேவன் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்கிறவர். கடலையும் ஆற்றையும் இரண்டாகப் பிளந்து வழி உண்டாக்குகிறவர். மரித்தவர்களை உயிரோடுகூட எழுப்புகிறவர். எப்பேர்ப்பட்ட வியாதியையும் நிமிஷத்திலே சுகப்படுத்துகிறவர். தண்ணீரை திராட்சை ரசமாக மாற்றுகிறவர். மனிதர்களாகிய நம்மால் கிரகிக்க முடியாத பெரிய காரியங்களைச் செய்கிறவர் இந்த சகல பிரஸ்தாபத்தைக் காட்டிலும் கர்த்தர் தமது வார்த்தையை மகிமைப்படுத்தி வைத்திருக்கிறார்.

**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது** (யோவான் *1:1*). கர்த்தர் தம்மையே வார்த்தை என்று சொல்லுகிறார். வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் உண்டாக்குவதற்கு முன்புதான் வார்த்தையாக இருந்ததாகச் சொல்லுகிறார். **அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்** (யோவான் *1:14*). இந்த வார்த்தைதான் மாம்சமாக உருமாறி, இயேசு கிறிஸ்துவாக, இந்த பூமியிலே வாசம் செய்ததாகச் சொல்லுகிறார்.

**ஆதிமுதல் இருந்ததும்,நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும் எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்** (*1* யோவான் *1:1*). இங்கே அப்போஸ்தலனாகிய யோவான், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை உயிருள்ள வார்த்தை என்று குறிப்பிடுகிறான். வார்த்தையின் மகத்துவத்தை சற்றே தியானிப்போம்.

நமக்கும் கர்த்தருக்கும் உள்ள உறவே வார்த்தைதான். ஒருவன் வெற்றியுள்ள வாழ்க்கை வாழாமல் இருப்பதற்கு காரணம் அவனிடம் வார்த்தை இல்லை. இயேசு கிறிஸ்து சாத்தானால் சோதிக்கப்பட்ட போது, அவனை வார்த்தையினால் வென்றார். வேதவார்த்தைகள் சாத்தானுக்கு எதிரானது. நம்முடைய வாழ்க்கையில் சோதனைகள் வரும்போது, வார்த்தையை விசுவாசித்து சோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

**இயேசுகிறிஸ்து அசுத்த ஆவிகளை தமது வார்த்தையினாலே துரத்தினார்** (மத்தேயு *8:16*). நாம் வெற்றியுள்ள செழிப்பான வாழ்க்கை வாழ வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அறிக்கை செய்ய வேண்டும். சூழ்நிலைக்கேற்ற வார்த்தைகளை பேச வேண்டும். வேத வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்க வேண்டும். வாக்குத்தத்தங்கள், தீர்க்கதரிசனங்கள், ஆசீர்வாதங்கள் இந்த வார்த்தையில் தான் இருக்கிறது. வேத வார்த்தை உள்ளவனே உண்மையான தீர்க்க தரிசி. இயேசுகிறிஸ்து மீண்டும் வரும்போது வேத வார்த்தையின் அடிப்படையில் நியாயந்தீர்ப்பு அமையும் (யோவான் *12:48*).

## வார்த்தையில் இரட்சிப்பு

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது** (ரோமர் *1:16*). அப்போஸ்தலனாகிய பவுல் வேத வார்த்தையைக்குறித்து பிரசங்கிக்க வெட்கப்படவில்லை. அவனுடைய பிரசங்கம் இரட்சிப்பைக் குறித்ததாயிருந்தது. ஒருவருடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய வல்லமை இந்த வார்த்தையில் உள்ளது. உலகத்திலுள்ள அனைத்து மக்களும் இரட்சிக்கப்படவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். தேவ பெலனாகிய நற்செய்தியைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்ல வெட்கப்படக்கூடாது. அவர்மேல் விசுவாசமாயிருக்கும் அனைவரையும் இரட்சிக்கிறார். எல்லோரும் ஆசீர்வாதமாயிருக்கவே தேவன் விரும்புகிறார். தேவனுடைய வார்த்தை மட்டுமே ஒரு மனிதனுடைய இருதயத்தை முற்றிலுமாக மாற்ற முடியும்.

## வார்த்தையில் விசுவாசம்

**விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** (ரோமர் *10:17*). வார்த்தையைக் கேட்பதன் மூலமே விசுவாசம் வருகிறது. ஒருவன் கிறிஸ்துவைப் பற்றி கூறும்போது மக்கள் நற்செய்தியைக் கேட்கிறார்கள். நாம் வார்த்தையை மீண்டும் மீண்டும் வாசித்து கற்று அறிந்து கொள்ள வேண்டும். வேதவார்த்தையை உணவைப்போல உட்கொள்ளும் போது, நமது விசுவாசத்தின் வளர்ச்சியைக் கண்டு கொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர், வார்த்தையின் வெளிச்சத்தை நமக்கு காட்டுவார். வார்த்தை, நம் மனதை புதுப்பிக்கிறது.

## வேதவசனத்தினால் ஆறுதல்

**தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிற வைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது** (ரோமர் *15:4*). வேத வசனத்தினால் நமக்கு பொறுமையும், ஆறுதலும் நம்பிக்கையும் உண்டாகிறது. துக்கத்தில் இருக்கும் ஒரு

மனுஷனை நாம் எவ்வளவு ஆறுதல் படுத்தினாலும், அவனுக்கு ஆறுதல் கிடைக்காது. ஆனால், அதே சமயத்தில், கர்த்தருடைய வார்த்தையை எடுத்து நாம் அவர்களுக்கு சொல்லும்போது, அவர்களுக்கு மிகுந்த ஆறுதல் உண்டாகும். புண்களை ஆற்றும் மருந்துபோல கர்த்தருடைய வார்த்தை உள்ளார்ந்த மனுஷனுக்குள் கிரியை செய்யும்.கர்த்தருடைய வார்த்தைக்குள் கர்த்தருடைய பெலன் இருக்கின்றது.

வேதம், தேவனுடைய மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது (2 தீமோத்தேயு 3:16). கர்த்தருடைய வேத வார்த்தை, வாழ்க்கையில் தவறு செய்கிறவர்களுக்கு நல்ல வழியை காட்டும். தவறுகளைத் திருத்தி நல்வழியில் வாழ துணை செய்யும் வேத வாக்கியங்கள் போதிக்கவும், தேவனைப் பற்றிய உண்மைகளைக் கற்றுக் கொடுக்கவும், தவறுகளை கண்டித்து திருத்தவும், நீதியை கற்றுக் கொடுக்கவும் செய்கிறது. நாம் வேதத்தை நன்கு கற்று அறிந்திருந்தோமென்றால், தவறான போதனைகளை இனம் கண்டு கொள்ளலாம். வேத வார்த்தைகள் மூலம் தேவனைப் பற்றி அறிகிற அறிவிலும், பரிசுத்த வாழ்க்கையிலும் வளர்கிறோம்.

## வார்த்தையினால் ஞானம்

**அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்** (1 கொரிந்தியர் 1:31). கிறிஸ்து நமக்கு ஞானமாக இருக்கிறார். பாவத்திலிருந்து விடுதலை அடையவும், தேவனோடு ஐக்கியமாய் இருக்கவும், நாம் பரிசுத்தமாய் இருப்பதற்கும் கிறிஸ்துவே காரணமாவார். இயேசு கிறிஸ்துவை நாம் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது இவைகள் நமக்கு சொந்தமாகின்றன. வார்த்தைகளை படித்து அவைகளின்படி நடக்கும்போது சத்துருக்களைக் காட்டிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறார் (சங்கீதம் 119:98).

## வெற்றிக்கு வழி வார்த்தை

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்** (சங்கீதம் 1:2). நாம் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கு, வேதத்தை தியானம் செய்ய வேண்டும். கர்த்தருயை போதனைகளை வாஞ்சித்து அவற்றைக் குறித்து இரவும் பகலும் தியானம் செய்யும்போது, நாம் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளலாம். செய்கின்ற செயல்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெறலாம். நாம் தியானிக்கும்போதுதான் வார்த்தையின்படி நடப்போம். நாம் வாசித்த வார்த்தைகளையே சிந்தித்துக் கொண்டிருப்பதுதான் தியானம்.

கர்த்தர் இஸ்ரவேலை வழிநடத்த யோசுவாவை தெரிந்தெடுத்தார். கர்த்தர் அவனிடம் இப்படியாகக் கூறினார்: **இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டு பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய்** (யோசுவா 1:8). வேத வார்த்தையின்படி நடக்க வேண்டும். எப்போதும் கர்த்தருடைய வார்த்தையை வாசித்து தியானிக்கும்போது, அதற்கு கீழ்ப்படிந்து நடப்போம். அப்படி நடந்தால், செய்கிற காரியங்கள் எல்லாவற்றையும் ஞானத்தோடு செய்து வெற்றியை அடையலாம்.



## ஆவி, ஆத்துமா, சரீரத்தை ஊடுருவிச் செல்லும் வார்த்தை

**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்காணதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது** (எபிரெயர்4:12). தேவனுடைய வார்த்தை உயிருள்ளது, வல்லமையுள்ளது. வாசிக்கிறவர்களின் வாழ்க்கையில் செயல்பட்டு வெற்றிகரமான நல்ல விளைவை ஏற்படுத்தி கர்த்தர் விரும்பும் முடிவை உண்டாக்குகிறது. உற்சாகமளிக்கிறது. இருதயத்தில் மறைந்துள்ள இரகசியங்களை வெளிப்படுத்துகிறது. நம் உள்ளான மனிதனின் எண்ணங்களையும், இருதயத்தின் குறிக்கோள்களையும் நியாயம் தீர்க்கிறது. வாசிக்கும்போது, நமது பாவங்கள், நல்ல மற்றும் தீய குணங்களை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. நாம் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக்கூடாது, நாம் யார் என்பதை நமக்கு காண்பிக்கிறது. நம் வாழ்க்கையை சீர்ப்படுத்துகிறது.

**வார்த்தையைக் கண்டுபிடிக்கிறவர் களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்** (நீதிமொழிகள் 4:22). வார்த்தையை கவனித்து அதன்படி நடக்கிறவர்களுக்கு வார்த்தை சுகத்தையும், ஆரோக்கியத்தையும் தரும். **கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு; அவர்களுக்கு இடறலில்லை** (சங்கீதம் 119:165). வேதத்தை நேசித்து, தியானிப்பவர்களை எதனாலும் வீழ்த்த முடியாது. **வார்த்தைகள் உனக்கு நீடித்த நாட்களையும், சமாதானத்தையும் பெருகப் பண்ணும்** (நீதிமொழிகள் 3:2), கட்டளைகளைக் காத்து அதன்படி நடக்கிறவர்களுக்கு ஆயுசு நாட்கள் அதிகரிக்கும். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைக் காட்டிலும் அதிக ஞானத்தை கர்த்தர் நமக்கு கொடுப்பார் (சங்கீதம் 119:100). இது தேவனிடத்திலிருந்து வரும் ஞானம். முதியவர்கள் பல அனுபவங்களி

னால் ஞானமாக இருப்பார்கள். எளிதாக புரிந்து கொள்வார்கள். இது உலக ஞானம். வார்த்தையின்படி நடந்து தேவஞானத்தை பெற்றுக் கொள்வோம். உலக ஞானத்தைவிட தேவன் தரும் ஞானம் மேலானது.

**கர்த்தர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்** (ஏசாயா 42:21). கர்த்தர் தமது ஜனங்கள் வேதவார்த்தையின்படி வாழ்ந்து வாழ்க்கையின் பரிபூரணத்தை பெற்றுக் கொள்ள விரும்புகிறார். ஆனால், இஸ்ரவேல் ஜனங்களோ, வேதவார்த்தையின்படி நடக்க மனதில்லாமல், வேதத்திற்கு செவிகொடாமல் போனார்கள். அவர்கள் வாழ்க்கையில் பல போராட்டங்கள் பிரச்சனைகள் வந்தபோதும் வேதத்தின் முக்கியத்துவத்தை உணராமல் இருந்தனர். கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி நடக்க வேண்டும்.

நாம் அனுதின வாழ்க்கையில் வெற்றியுள்ள, சமாதானமான, சந்தோஷமான வாழ்க்கையை வாழவும், போராட்டத்திலிருந்து விடுதலை பெறவும், சோதனையை மேற்கொள்ளவும், ஞானமாக நடந்து கொள்ளவும், வேதத்தை நாம் படித்து அதன்படி நடக்கவேண்டும். குடும்ப உறவுகள், நண்பர்கள் ஒருவருக்கொருவர் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும், நல்லொழுக்கமுள்ள வாழ்க்கையை வாழவும், நீதியுள்ளவர்களாக, விவேகமுள்ளவர்களாக, குற்றமற்றவர்களாக, தேவபக்தியுள்ளவர்களாக, கர்த்தருக்கு பயந்தவர்களாக வாழ



வேதத்தை படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். நாம் தேவனது வழிகளைத் தெரிந்து கொள்ளும்போது, தேவன் நமக்கு ஞானத்தை கொடுக்கிறார். வேதம் நம்மை செம்மையான பாதையில் நடத்துகிறது. நல்ல நட்புகளை உருவாக்கவும், சரியான தீர்மானங்களை எடுக்கவும் உதவி செய்கிறது. பிறருடன் நல்ல உறவுகளை உருவாக்கிக் கொள்ளவும், விட்டுக் கொடுத்து, அன்புடன், தியாகத்துடன் ஒழுக்கத்துடன் வாழவும், உறவுகளில் நிலைத்திருக்கவும் வேதம் நமக்கு வழிகாட்டுகிறது. ஞானம் தேவனிடத்திலிருந்து அவருடைய வார்த்தையிலிருந்து வருகிறது. நாம் அவருடைய வழியில் நடக்கும்போது உண்மையான ஞானம் தேவன்தான் என்பதை கண்டுபிடித்துவிடலாம். அவர் நம்மை வழிநடத்தி உண்மையாய் அவரைத் தேடினதற்கான பலனை அவர் அளிப்பார். நாம் தேவனுக்குள் வளர வேண்டுமானால்



வேதவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

சிலர் மிகவும் பக்தியாய் காணப்படுவார்கள். அவர்கள் ஜெபிக்கும்போது, ஆண்டவர்மீது தாங்கள் மிகவும் பக்தியாய் இருப்பதுபோல காண்பிப்பார்கள். ஆனால், வேதவசனம் அவர்களிடத்திலே காணப்படாது. சொந்தமாக பேசிக் கொண்டிருப்பார்கள். தங்களுடைய சொந்த யோசனைகளை வைத்து ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். இது உண்மையான பக்தியல்ல. பக்தி என்பது கர்த்தருக்கும் மனுஷனுக்கும் உள்ள உறவு. வேதத்தை நன்கு படித்து, அதன்மூலம் கர்த்தரை மேலும் அறிந்து கொண்டு, அதை அடிப்படையாக வைத்து, அவரோடு கொள்ளும் உறவே உண்மையான அன்பும் பக்தியுமாகும். சிலர் சிறுபிராயத்திலோ, முன்போ எப்பொழுதோ படித்த வேதவசனங்களை இன்று படித்ததாக காண்பிப்பார்கள். இதுவும் சரியான காரியம் அல்ல. இது எதைக்காட்டுகிறது என்றால், முன்னர் அவர்களிடத்தில் வேதவாசிப்பு இருந்தது. இப்போது அவர்களிடத்தில் வேத வாசிப்பு இல்லை. அப்படியென்றால் அவர்கள் இப்பொழுது கர்த்தருடைய உறவில் இல்லை. ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்து கர்த்தருடைய உறவில் நாம் வளர வேண்டும். இது அவசியம்.

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தமமார்க்கத்தார் பாக்கியவான்கள்** (சங்கீதம் 119:1). கர்த்தருடைய வேதத்தை பின்பற்றுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அநேகர் வேதத்தை கடமைக்காக வாசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால், அதன்படி நடக்கமாட்டார்கள். இயேசு கிறிஸ்துவை அறியாத ஒரு சகோதரி, தன்னுடைய கணவர் தினமும் காலையில் வேதத்தை படிக்கிறார் என்றும், ஆனால், அவர் தன்னிடம் அன்பில்லாமல், இரக்கமில்லாமல், பேசுவதையும் நடந்து கொள்வதையும் குறித்து வருத்தப்பட்டார்கள். ஏன் வேதத்தை படிக்கிறவர்கள் அதன்படி நடக்கிறவர்களாக



இல்லை? முழுமையாக இரட்சிக்கப்படாமல், பெயருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்பவர்களும், பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாதவர் களும்தான் வேதத்தின்படி நடக்காமல் இருப்பவர்கள். அநேகர் வேதத்தை ஆலயத்திற்கு செல்லும்போது மட்டும் பயன்படுத்துவார்கள்.

**தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்** (லூக்கா 11:28). தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து

நடப்பவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். நாம் வார்த்தையின்படி நடக்கிறவர்களாக இருக்கிறோமா? நாம் வேதத்தை படிக்காமல், அவரைப்பற்றி அறிந்து கொள்ளாமல் இருந்தோமென்றால், தேவனுக்கும், நமக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை. **தேவனு டைய வசனத்தைக் கேட்டு, அதன்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும், எனக்குச் சகோதரருமாயிருக்கிறார்கள்** (லூக்கா *8:21*). நாம் எப்பொழுதும், எந்த சூழ்நிலையிலும், கர்த்தருடைய வார்த் தைக்கு தொடர்ந்து கீழ்ப்படிகிறவர்களாக, வார்த்தையில் நிலைத்திருக்கிறவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையை மற்றவர்கள் பார்க்கும்போது, வார்த்தைக்கு ஒத்துப்போகிறவர்களாக, முரண்பாடற்றவர்களாக நாம் இருக்க வேண்டும்.

வேதத்தை வாசிக்கும்போதுதான், கர்த்தருக்கு பிரியமானது எது என்றும், பிரியமில்லாதது எது என்றும் அவரது இயல்பையும், ஏன் அப்படியாகச் சொல்லுகிறார் என்பதையும் அறிந்து கொள்ளலாம். அவரை முழுமையாய் புரிந்து கொள் ளும்போது, அவரை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொள்வோம். முக்கியமான முடிவுகளை எடுக்கும் போது, கர்த்தரை நினைத்துப் பார்த்து, அவரது விருப்பத்தை மனதில் வைத்தே முடிவுகளை எடுப்போம். நம் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் கர்த்தரை நினைத்துப் பார்ப்போம். வேதத்தை அதிகமாக படிக்க படிக்க அவரை விரைவாக உணர்ந்தறியும் ஆற்றலுள்ளவர்களாயிருப்பேம். அவரின் தன்மையைக் குறித்து அறியும் திறனுள்ளவர்களாயிருப்போம். தேவனுடைய வார்த்தையை புரிந்து கொண்டு அதற்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது நமக்குள் மனநிறைவு வரும். வார்த்தையை ஏற்றுக் கொண்டு தேவன் விரும்புவதை செய்கிறவர்களாக இருக்கும்போது நம் வாழ்வில் முன்னேற்றத்தைக் காணலாம். தேவனுடைய வழியில் நடந்து நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுப்போம். நம் விருப்பத்தை அல்ல, தேவனுடைய விருப்பத்தையே செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வோம். அவருடைய விருப்பம் நம் விருப்பமாக மாறும். தேவன் எல்லா காரியங்களையும் அவருடைய வார்த்தையின் வழியாக நிறைவேற்றுவார். தேவனுடைய வார்த்தை நம் வாழ்க்கையில் வழிகாட்டியாக இருந்து, நம்மை சீர்படுத்தி, தேவனுடைய சித்தத்தின்படி நம்மை நடக்க வைக்கிறது. அவரை புரிந்து கொண்டு, கீழ்ப்படிந்து நடக்கும்போது சந்தோஷத்தை நம் வாழ்க்கையில் பெற்றுக் கொள்ளலாம். தெய்வபயத்தோடுகூட, வாழவும், பரிசுத்தமாக வாழவும், ஞானமாக வாழவும், பாவத்தை மேற்கொள்ளவும்,விசுவாசத்தில் வளரவும் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழவும் தேவ வார்த்தை உதவி செய்கிறது.

நாம் வேதத்தை படிக்கிறவர்களாய் இருந்தால், வேதவார்த்தையை அடிப்படையாக வைத்த ஒரு வாழ்க்கையை வாழுவோம். சுயமாக செயல்படவும், சுய அறிவின்படி பேசவும்மாட்டோம். வேதவார்த்தையை அடிப்படையாக வைத்தே பேசுவோம். சிலர் தாங்கள் நினைத்ததை எல்லாம் பேசிக் கொண்டே இருப்பார்கள். வேதத்திற் கும் அவர்களுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்பதை அறிந்து கொள்ளலாம். வேதத்திற்கு அவர்கள் வாழ்க்கையில் இடமில்லாததால் இப்படியாக பேசுவார்கள். சிலர் சுயவிருப்பத்தின்படி பல திட்டங் களைப் போடுவார்கள். இது வேதவார்த் தைக்கு எதிராக இருக்கும். சிலர் சுய நீதியை உடையவர்களாய் இருப்பார்கள். சிலர் தாராள மனப்பான்மையில்லாமல் கஞ்சத்தனமுள்ளவர்களாக இருப்பார்கள். சிலர் தங்களுக்கு இருப்பதில் மனநிறைவில்லாமல் இன்னும் வேண்டும் என்ற பேராசையுடன் இருப்பார்கள். சிலர் மற்றவர்களுடைய பொருட்களையும், பணத்தையும் வசதிகளையும் பார்த்துக் கொண்டு தனக்கும் அதுபோல் வேண்டும் என்று நினைத்து பொறாமைப்படுவார்கள். சிலர் மற்றவர்களுக்குரியதை அபகரிப்பதிலேயே குறியாய் இருப்பார்கள். தங்களுக்கு இருப்பதில் திருப்தியடையமாட்டார்கள். சிலர் மற்றவர்களை பரியாசஞ்செய்து கொண்டிருப்பார்கள். சிலர் மற்றவர்களது குறைகளையே சொல்லி தூற்றிக் கொண்டிருப்பார்கள்; நல்ல குணங்களைப் பேசமாட்டார்கள். துன்மார்க்கரோடு, சிலர் சேர்ந்து கொண்டு அவர்களைப் புகழ்ந்து பேசுவார்கள். சிலர் நல்லவர்களை தீயஜனங்கள் என்றும், தீயவர்களை நல்லவர்கள் என்றும் கூறுவார்கள். சிலர் மற்றவர்களுடைய இனிமையாக பேசுவார்கள். அவர்கள் உள்ளமோ, கபடத்தால் நிறைந்திருக்கும். மிகவும் நல்லவர்களைப்போல நடிப்பார்கள். முதுகுக்கு பின்னே புரணிப் பேசுவார் கள். சிலர் தங்களைத் தாங்களே உயர்வாக எண்ணிக் கொள்வார்கள்; மற்றவர்களை தாழ்வாக பார்ப்பார்கள். சிலர் வாயைத் திறந்தாலே பெருமையாக பேசிக் கொண்டிருப்பார்கள். சிலர் எப்பொழுதும் பொய் பேசி மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். சிலர் எப்பொழுதும் தந்திரமாகவே இருப்பார்கள். சிலர் மற்றவர்களிடம் வாங்குகிறவர்களாகவே இருப்பார்கள்; யாருக்கும் ஒன்றும் கொடுக்க மனதில்லாதிருப்பார்கள். இரக்கமில்லாமல் இருப்பார்கள். சிலர் மற்றவர்களுக்கு அடங்காதவர்களாக, சுயநலமுள்ளவர்களாக இருப்பார்கள். சில குடும்பத் தலைவர்கள் மனைவிக்கு பயந்து கர்த்தருடைய வார்த்தையின்படி, தலையாக இருக்காமல், வாலாக மனைவிக்கு அடிமையைப்போல இருப்பார்கள். சில குடும்பங்களில்



கர்த்தருடைய வார்த்தைக்கு மாறாக மனைவி, குடும்பத்திற்கு தலையாக இருந்து குடும்பத்தை நடத்துவார்கள். எப்பொழுதும் கணவனிடம் சண்டைப்போட்டுக் கொண்டு, கணவனை அடக்கி ஆள்வார்கள். சில குடும் பங்களில் கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக கணவனின் தாயார் குடும்பத்திற்கு தலையாக

இருந்து குடும்பத்தை நடத்துவார்கள். எல்லா முடிவுகளையும் அவர்களே



எடுப்பார்கள். எல்லா அதிகாரத்தையும் தனது கையில் வைத்திருப்பார்கள். சில குடும்பங்களில் தனக்கு துணையாக வந்த மனைவியை, கணவன்மார் ஒரு அடிமையைப்போல, வேலைக்காரிகளைப்போல நடத்துவார்கள். நாம் வேதத்தை படிக்கும்போதுதான் இந்த சுபாவங்கள் எல்லாம் தவறு என்பதை உணர்ந்து கொள்ள முடியும். தேவனுக்கு பிரியமில்லாத இந்த பாவ சுபாவங்களை நம்மைவிட்டு அகற்ற முடியும்.

**வேதப்பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்; வேதப்பிரமாணத்தைக் கை கைக்கொள்ளுகிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள்** (நீதிமொழிகள் 28:4). துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் (நீதிமொழிகள் 17:15). தீயவரை நல்லவர்கள் என்றும், நல்லவரைத் தீயவர் என்றும் தீர்ப்பு சொல்லுவதையும் நம் கண்கூடாக பார்க்கிறோம். ஆனால், இவை கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானவை.

நாம் நம்முடைய பார்வையில் எல்லாக் காரியங்களையும் பார்க்கிறோம். ஆனால், வேதத்தை படிக்கும்போது, கர்த்தர் ஒரு காரியத்தை எப்படியாக பார்க்கிறார் என்பதை அறிந்து கொண்டு, கர்த்தருடைய பார்வையில் எல்லாவற்றையும் பார்க்க ஆரம்பிப்போம்.

நாம் இந்த உலகத்தில் ஆசீர்வதமாக வாழவேண்டுமானால், வேத வார்த்தைக்கு முழுமையாய் கீழ்ப்படிந்து நடக்க நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். பாவ உணர்வடையும்போது, உடனே நம்மை திருத்திக் கொள்ளும் மனப்பான்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும். வேதத்தின் ஆழங்களை கற்றுக் கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையோடுகூட வேதத்தைப் படிக்க வேண்டும். நாம் வேதத்தை நேசித்து, தியானிக்கும்போது பரிசுத்தமடைகிறோம். வேதம் வாழ்க்கையை மாற்றுகிறது.

**என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்** (யோவான் 14:21). தேவனுடைய வார்த்தையை நேசித்து, தியானம் செய்து அதன்படி செய்கிறவர்களே இயேசு கிறிஸ்துவை உண்மையாய் நேசிப்பவர்கள். அவரைப் பின்பற்றுகிறவர்கள், அவருக்கு கீழ்ப்படிவதினாலேயே அவரிடத்தில் உள்ள அன்பை வெளிப்படுத்துவார்கள். அவரிடத்தில் அன்பாயிருக்கிறேன் என்று நம்மு



டைய வாயினால் சொல்வதைவிட, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவருடைய வார்த்தையின்படி நடந்து காண்பிப்பதே மேலானது. தேவ வார்த்தையின்படி நடப்பேன் என்று தீர்மானம் எடுக்க வேண்டும். வார்த்தையை முழுமையாய் நம்பி, அதை வாசித்து தியானிக்க நமது நேரத்தையும் கவனத்தையும் கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். உள்ளார்ந்த ஈடுபாட்டோடு அதைச் செய்யவேண்டும். நாம் தேவனை உண்மையாய் நேசித்தோமென்றால், வார்த்தையில் அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ, அதன்படி உண்மையாய் நடப்போம். தொடர்ந்து அவருடைய வார்த்தையில் நிலைத்திருப்போம். உண்மையாய் கர்த்தரை நேசிக்கிறவர்களை எப்படி கண்டறிந்து கொள்வதென்றால், அவர்கள் அதிகமாக வேதத்தைப் படித்து, கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவில் வளர்ந்திருப்பார்கள். தேவனுடைய ஒருசில கட்டளைகளுக்கு அல்ல, எல்லா கட்டளைகளுக்கும் முழுமையாக கீழ்ப்படிந்திருப்பார்கள்.

இயேசு கிறிஸ்து பிதாவின் வார்த்தைகளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்திருந்தார். பிதாவின் கட்டளைகளின்படி நடக்க தன்னை அர்ப்பணித்தார். பிதாவுக்கு பிரியமானவைகளையே எப்பொழுதும் செய்தார் (யோவான் 8:29). பிதாவின் சித்தத்தை செய்கிறவராயிருந்தார். சோதனைகள், போராட்டம், உபத்திரவங்கள் இந்த உலகத்தில் வரும்போது, வார்த்தையின்படி நடக்க நாம் உறுதியோடிருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவை பின்பற்றி வாழ வேண்டும். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் (யோவான் 16:33). இயேசு கிறிஸ்து நம்மோடுகூட இருக்கும்போது, அவரைச் சார்ந்து தைரியத்தோடு பிரச்சனைகளை மேற்கொள்ள வேண்டும்.

**எப்படியெனில் ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும், குற்றவாளியாயிருப்பான்** (யாக்கோபு 2:10). நாம் வேதத்தை கற்று அறிந்து வைத்திருக்கலாம். பல பட்டங்களை வாங்கியிருக்கலாம். மற்றவர்களுக்கு போதிக்கிறவர்களாய் இருக்கலாம். இவையெல்லாம் எளிது. ஆனால், வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடப்பதே முக்கியம். நடைமுறை வாழ்க்கையில் நாம் கட்டளைகளை கடைபிடிக்கிறவர்களாக இருப்பதே மேலான பாக்கியம்.

அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும் (1 யோவான் 2:4-6). நாம் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளாமல் தேவனோடு ஐக்கிய

*இயேசு கிறிஸ்துவைப்போல நடப்பது என்பது சோதனைகளை மேற்கொண்டு அவருடைய போதனைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரைப்போல வாழ்வதாகும்*

மாய் இருக்க முடியாது. நாம் ஒரு பாவமும் செய்யவில்லை என்று சொல்லுகிறவர்களாய் இருந்தால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாய் இருக்கிறோம். ஒருவன் நான் ஒளியின்தான் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அவன்தன் சகோதரனை வெறுத்தால் அவன் இன்னும் இருளில்தான் இருக்கிறான். தேவனுடைய வார்த்தை அவனுக்குள் இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். இயேசு கிறிஸ்துவாகிய ஒளியில் நடக்கிறவன் (மற்றவர்களுக்கு முன்மாதிரியான வாழ்க்கை வாழ்கிறவன்) பாவம் செய்யமாட்டான். நாம் அறியாமல் பாவம் செய்துவிட்டால், நாம் செய்த பாவத்தை வெறுத்து, மனந்திரும்ப வேண்டும். நாம் செய்த பாவங்களை ஒத்துக்கொண்டு, இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து, பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை, அவர் தம்முடைய இரத்தத்தினால் கழுவி சுத்திகரித்து பரிசுத்தப்படுத்தி விடுகிறார். நாம் அவருடைய பிள்ளைகளாகி விடுகிறோம். பின் நாம் தொடர்ந்து அவரைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கவேண்டும். தாவீது தான் செய்த பாவத்தை உணர்ந்துகொண்டு மனந் திரும்பினான். மறுபடியுமாக அதே பாவத்தில் அவன் விழவில்லை. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதிமொழிகள் 28:13).



கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள், அவர் சொல்லியபடி நடந்து, அவர் விரும்பிய வாழ்க்கையை வாழ்வார்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்கு கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது (1 யோவான் 3:23). நாம் நடந்து கொள்ளும் முறையை வைத்தே நாம் உண்மையாய் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோமா? இல்லையா என்பது விளங்கும். இயேசு கிறிஸ்துவைப்போல நடப்பது என்பது சோதனைகளை மேற்கொண்டு அவருடைய போதனைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரைப்போல வாழ்வதாகும். மனதுருக்கத்தோடு இருந்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய வேண்டும். அவரைப்போல அன்பாய் இருக்க வேண்டும் (1 யோவான் 4:12).

அபிஷேகம் சகலத்தையும் நமக்கு போதிக்கிறது (1 யோவான் 2:27). கர்த்தர் நமக்குள் இருக்கிறார் என்பதை அபிஷேகத்தால் அறிந்திருக்கிறோம். அவரது அபிஷேகம் நமக்கு போதித்ததைப்போல நாம் கிறிஸ்துவுக்குள் வாழவேண்டும். நாம் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, அவருடைய அன்பால் நிறைந்து ஒருவரையொருவர் நேசிப்பதே உண்மையான அன்பு. இது தேவனிடத்திலிருந்து வரும் அன்பு. சிலர் இரட்சிக்கப்படாமல், அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளாமல், சுயமாக எல்லோரையும் நேசிக்க வேண்டும் என்று சொல்லி அன்பு கூருவார்கள். இந்த அன்பு உண்மையான அன்பு அல்ல. இது மாம்சத்திலிருந்து வெளிப்படும் அன்பு. இவர்கள் வேதத்தை அரைகுறையாக படித்திருப்பவர்கள்.

தேவன் அன்பாக இருக்கிறார். அதே அன்பு நமக்குள் இருந்தால் நாம் பாவம் செய்யமாட்டோம். நம்மிடத்தில் பாவமில்லையென்றால் சுத்த மனசாட்சியோடு இந்த பூமியிலே வாழலாம். பரலோகத்திற்கு செல்லலாம். கர்த்தருடைய வார்த்தையின்படி, நாம் நடக்கும் போது, அந்த அன்பு நமக்கு வரும். ஆமென்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா



# புதிய ஆண்டு

ப்ரஸாந் ஜெர்மனி




ஒரு புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கிறோம். இந்த வருடம், எனக்கு எப்படி இருக்குமோ? என்ற எதிர்பார்ப்பும், வாஞ்சையும் எல்லோரிடத்திலும் இருக்கும். நாம் நம்மைச் சுற்றி இருப்பதையும், வருடத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஒரே வழிதான் உண்டு. ஆம், நம் கண்களை ஏறெடுத்து, நம்மை உருவாக்கின நம் பரம தகப்பன், கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும்.

கர்த்தருடைய கரத்தில்தான் நம் காலங்கள் இருக்கின்றது (சங்கீதம் 31:15). நம்முடைய சுவாசம் அவருடைய கரத்தில்தான் இருக்கின்றது (தானியேல் 5:23). அவர், கல்லோ, மரமோ அல்ல. பேசுகிற ஜீவனுள்ள தேவன், நம்மோடு பேசுகிறவர், எப்பொழுதும் நம்மோடு இருப்பவர், நமக்குள்ளே வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவர்.

நம் ஒவ்வொருவரைக் குறித்தும் கர்த்தர் ஒரு தரிசனத்தை வைத்திருக்கிறார் (ஆபகூக் 2:3). அதற்கான வாஞ்சையை நம் உள்ளத்தில் வைத்திருக்கிறார் (பிலிப்பியர் 2:13). நம்மைக்கொண்டு, கர்த்தர் செய்யப்போகிற காரியங்களைக் காட்டிலும், நாம் அவருக்கு முக்கியம். நாம் அவரைப்போல இருக்க வேண்டுமென்பதே, கர்த்தருடைய வாஞ்சை. அதற்காகவே, அவருடைய ஆவியினால் நம்மை நிரப்புகிறார். அவருடைய அன்பு, ஞானம், விசுவாசம், வரங்கள், கனிகளினால் நம்மை நிரப்புகிறார். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக, தேவன், மாம்சத்தில் இயேசு கிறிஸ்துவாய் எப்படி பூமியில் வாழ்ந்து காண்பித்தாரோ, அப்படியே நாமும் இருக்க வாஞ்சிக்கிறார். இயேசு கிறிஸ்துவே நமக்கு எல்லா காரியங்களுக்கும் முன்மாதிரி.

இன்று இயேசு கிறிஸ்து இந்த பூமியில் இருந்தால் எப்படி பேசுவார், அவருடைய நடத்தை எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்து, வேதத்தை எடுத்து படிக்கும்போது, அவற்றிற்கான பதில் நமக்கு கிடைக்கும்.

எல்லா நாட்களும், மாதங்களும், வருடங்களும், கர்த்தர் உருவாக்கினவைதான். நல்ல நாள், கெட்ட நாள் என்று கிடையாது. நம்முடைய ஆசீர்வாதம் கர்த்தருடைய கரத்தில், இருதயத்தில் இருக்கிறது. அது, ஒரு நாளிலோ, மாதத்திலோ, வருடத்திலோ இல்லை. நம்மை ஆசீர்வதிக்கவே கர்த்தர் பிரியப்படுகிறார் (எண்ணாகமம் 24:1).

எதுவும் நம்முடைய கரத்தில் இல்லை. எல்லாமே கர்த்தரிடமிருந்து



தான் வர வேண்டும். மழை, வெளிச்சம், காற்று எல்லாமே அவர் தருபவை. சமுத்திரத்தின் தண்ணீருக்கு எல்லையை வைத்திருப்பது கர்த்தரே. இன்று நாம் ஜீவனுடன் இருப்பது கர்த்தருடைய கிருபையினால் (புலம்பல் 3:22). நம் தலையிலிருந்து ஒரு முடி விழவேண்டுமானாலும்கூட அவர் சித்தம் கொண்டாலே விழும். நாம் இந்த பூமியிலே இருப்பது கர்த்தராலேயே. எதுவும் மனுஷனாலே ஆவதில்லை.

இந்த புதிய வருடத்திலே நமக்கு காரியங்கள் எப்படி இருக்கும்? எந்தக் காரியமும் தானாக நடப்பதில்லை. எந்தக் காரியத்தையும் மனுஷன் செய்ய முடியாது. கர்த்தர்தான் நம்முடைய எல்லா காரியங்களையும் நடத்தினார், நடத்தப்போகிறார். அப்படியென்றால், கர்த்தர், நமக்காக காரியங்களை எப்படி நடத்தப்போகிறார்?

ஒரு பூவைப் பார்க்கும்போது, அதற்குப் பின்னால் உள்ள அதின் வளர்ச்சியின் பின்னணியை யோசித்துப் பார்க்கவேண்டும். முதலாவது விதை, பின்பு செடியாகி, இலைகளை விட்டு, போதாகி, பின்பு மலராகிறது. அதேபோல மனுஷனுக்கும் வளர்ச்சியின் பின்னணி உண்டு. முதலாவது கரு, பின்பு குழந்தை, அடுத்து வாலிபப் பருவம், அடுத்தது நடுத்தர வயது, பின்பு முதிர்ந்த பருவம். ஒரு பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே பல காரியங்கள் படிப்படியாக நடக்கின்றன. கர்த்தர் இப்படிப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும், ஒரு காலகட்டத்தை நிர்ணயித்து வைத்திருக்கிறார் (பிரசங்கி 3:1-11). தண்ணீரை திராட்சரசமாக மாற்றுவதற்குக்கூட ஒரு வேளையை வைத்திருந்தார் (யோவான் 2:4). அதினால், இந்த வருடத்தில், கர்த்தர் நமக்கு எதை செய்ய தீர்மானித்துள்ளாரோ, அவற்றையெல்லாம் தவறாது செய்வார். அவர் உண்மையுள்ள தேவன், அவரிடத்தில் பொய் இல்லை (எண்ணாகமம் 23:19). அவர் மனுஷன் அல்ல, தேவன். அவர் செய்ய நினைத்தது ஒருபோதும் தடைபடாது (யோபு 42:2).

இந்த வருடத்தின் நாட்களை, கர்த்தர் நமக்காகவே உருவாக்கி வைத்திருக்கிறார். இந்த வருடத்தில் நமக்கு கிடைக்கவேண்டிய ஆசீர்வாதத்தையும் அவர் ஏற்கெனவே தம்முடைய தீர்க்கதரிசன புஸ்தகத்தில் எழுதி வைத்துவிட்டார். அதை ஒரு மனுஷனாலும் திருத்தி எழுத முடியாது. அவரும் அதை திருத்தி எழுதமாட்டார்.

நமக்கு இன்னது தேவை என்பதை நாம் அவரிடத்தில் கேட்பதற்கு முன்னரே அவர் அறிவார் (மத்தேயு 6:8). ஆனாலும், கேளுங்கள், கொடுக்கப்படும் என்றார். கர்த்தர் நமக்காக ஆயத்தம்பண்ணி வைத்திருப்பவற்றை நம்மால் காண முடியாது. நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஆனால், ஒன்று நிச்சயம். ஆம், கர்த்தர் நம்மீது வைத்திருக்கும் அன்பு. கல்வாரி சிலுவையில் அவர் நமக்காக ஜீவனையே கொடுத்தார். அவரையே கொடுத்தவர், மற்றதெல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32).

ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள். உங்களை உண்மையாக நேசிக்க உங்களுடைய பரம தகப்பன் இருக்கிறார். அவர் சர்வத்தையும் சிருஷ்டித்த, சர்வ வல்லமையுள்ள தேவன். அவர், உங்கள்மேல் வைத்துள்ள அன்பை நோக்கிப் பாருங்கள் (1 யோவான் 4:16). அந்த அன்பினிமித்தம் உங்களை ஆசீர்வதிப்பார். ஒருநாளும் உங்களை கைவிடமாட்டார். இந்த வருடமும், அவர் உங்களோடுகூட இருந்து வழி நடத்துவார். உங்கள் தேவைகளையெல்லாம் சந்திப்பார். உங்களை பாது காப்பார், சுகம் தருவார், ஆசீர்வதிப்பார். ஆமென்!